மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் பணிகள், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகள் தொடர்பாக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் முனைவர் ஏ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், கூடுதல் ஆட்சியர் கோகுல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் – கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள்

13,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கில் சேமிக்கப்பட்டு வருகின்றன!

அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, அக்.23-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் மேலையூர் கிராமத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகளை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இவ்வாய்வின்போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குனர் முனைவர் ஏ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

இவ்வாய்வின்போது, உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் செய்வது தொடர்பாக தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தின்போது, நெல் விளைகின்ற அனைத்து மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களில் வாங்கப்படும் நெல்லினை பாதுகாக்க வேண்டும் என வும், அதனை உடனடியாக நெல் அரவை ஆலைக்கு அனுப்ப வேண்டும் எனவும், வெளிமாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, 3 முறை முதலமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டத்தை நடத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், துறை சார்ந்த அலுவலர்களுடன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்போது, இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் எடுக்கப்பட்ட நெல்லின் ஈரப்பதம் 14.8 சதவீதம் உள்ளது. கடந்த காலங்களில் அக்டோபர் மாதங்களில் நெல் கொள்முதல் நடைபெற்று வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின், நான்கு ஆண்டுகளாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் செப்டம்பர் மாதத்திலேயே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லினை வாங்க வேண்டும் என்ற அடிப்படையில் நெல் கொள்முதல் பணிகள் நடந்து வருகிறது. இவ்வாண்டு, சன்னரகத்திற்கு ஊக்கத்தொகையை 156 ஆக உயர்த்தியும், பொதுரகத்திற்கு 131 ஆக உயர்த்தி, சாதாரண நெல்லுக்கான ஒரு குவிண்டாலின் விலை ரூ.2545 மும், பொதுரகத்திற்கான ஒரு குவிண்டாலின் விலை ரூ.2500 என உயர்த்தி தந்துள்ளார்கள். டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கோரிக்கைக்கிணங்க, நெல்லின் ஈரப்பதம் 22 சதவீதமாக உயர்த்தி தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாளது தேதியில் 700 அரிசி ஆலைகளில் 12 இலட்சம் மெட்ரிக் டன் மாதந்தோறும் அரைக்கின்ற அளவிற்கு அரவைத் திறனை கொண்டுள்ளோம். இதனுடன் செறிவூட்டப்பட்ட அரிசியை கலந்து பொதுமக்களுக்கு வழங்க வுள்ளோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றப்பின், ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 800 மூட்டைக்கு பதிலாக 1000 மூட்டைகள் வாங்க வேண்டும் என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் ஒரு இயந்திரத்திற்கு பதிலாக நெல் அதிகமாக வரும் நேரங்களில் 2 இயந்திரங்கள் வைத்து 3000 மூட்டைகள் வரை வாங்கி வருகின்றோம். வரும் காலங்களில் ஒரே இடத்தில் 5000 மூட்டைகள் தானியங்கி முறையில் நெல் கொள்முதல் பணிகள்; நடைபெறுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 9 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தை பொறுத்தவரை 91 சதவீதம் அறுவடை முடிந்துவிட்டது. மீதமுள்ள 9 சதவீதம் அறுவடை பணிகள் விரைவில் முடிவடைய உள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில், 144 எண்ணிக்கையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 1 இலட்சத்து 19 ஆயிரத்து 856 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டு, 93 ஆயிரத்து 640 மெட்ரிக் டன் நெல் பாதுகாப்பாக நகர்வு செய்யப்பட்டு;, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இருப்பில் உள்ள 26,396 மெட்ரிக் டன் நெல் பாதுகாப்பாக மூடி வைக்கப்பட்டு நகர்வு செய்யப்படும். லாரி மற்றும் இரயில்களின் மூலமாக நெல் நகர்வு செய்யப்பட்டு வருகிறது. கூடுதலாக வேளாண்மைத்துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கிடங்குகளில் 4396 மெட்ரிக் டன் நெல் மணிகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இக்குறுவை பருவத்தில் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட நெல் மணிகளை சேமிப்பதற்காக மல்லியம் பகுதியில் சுமார் 3500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தனியார் கிடங்கும் மற்றும் என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலையில் உள்ள சுமார் 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கில் தற்பொழுது நெல் சேமிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

தொடர்ந்து, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் பணிகள், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகள் தொடர்பாக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இவ்வாய்வின்போது, கூடுதல் ஆட்சியர் கோகுல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் திருமதி.நலினா, வேளாண்மை துறை இணை இயக்குநர் சேகர், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. அர்ச்சனா, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கமலக்கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேற்று (22.10.2025) அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இராயபுரம் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில உரிமைகளை விட்டுக் கொடுத்து – பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி

மாநில உரிமைகளுக்காகப் போராடும் 'திராவிட மாடல்' முதல்வரை குறை கூறுவதா?

எடப்பாடிக்கு – அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

சென்னை, அக்.23-

மாநில உரிமைகளை விட்டுக் கொடுத்து - பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி மாநில உரிமைகளுக்காகப் போராடும் திராவிட மாடல் முதல்வரை குறை கூறுவதா? என்று எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது :-

புதிய டி.ஜி.பி. நியமனம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் முன்னாள் டி.ஜி.பி. அவர்களின் பதவிக்காலம் கடந்த ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்தும், இதுவரை புதிதாக டி.ஜி.பி. நியமிக்கப்படவில்லை என்றும், தங்களுக்கு ஏற்ற நபரைத தேர்தல் நோக்கத்திற்காக நியமிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு காலதாமதம் செய்யப்படுகின்றது என்றும் வழக்கம் போல் அடிப்படையில்லாமல் பேசியிருக்கிறார்.

மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருந்த காரணத்தால்தான், புதிய டி.ஜி.பி. நியமனத்திற்கான பட்டியல் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு (UPSC) உரிய காலத்தில், அனுப்பி வைக்க இயலவில்லை என்ற அடிப்படை உண்மையைக் கூட அவர் தெரிந்து கொள்ள முற்பட வில்லை. வழக்கு முடிந்த பின்னர் எந்தவிதக் காலதாமதமும் இன்றி அந்தப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டது என்று ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருந்ததையும் அவர் புரிந்து கொள்ளவில்லை.

அதன்பிறகு டிஜிபி நியமனப் பட்டியல் தொடர்பாக ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய கூட்டத்தில், விதிகளுக்குப் புறம்பாக சில பெயர்கள் முன்மொழியப்பட்டது குறித்து, தமிழ்நாடு அரசு தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தது. மாநில உரிமைகளை மதிக்கும் ஒரு அரசு. பழனிசாமி போல அமைதி காக்க முடியாது.

இருப்பினும், மாநில சட்டம் - ஒழுங்குக்குப் பொறுப்பான தமிழ்நாடு அரசின் கருத்துகளை ஏற்காமல், தாங்கள் விரும்பியவர்களையே முன்மொழிந்து ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் பட்டியலை அனுப்பி வைத்தது. இந்தப் பட்டியல் தமிழ்நாடு அரசால் ஏற்கத்தக்கதாக இல்லாத நிலையில், அதற்கான காரணங்களை முழுமையாக விளக்கி, தலைமைச் செயலாளர் அவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்குக் கடிதம் எழுதியுள்ளார். அதற்கான பதில் இன்னும் பெறப்படாத நிலையில், "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்" என்ற கதையாக மாநிலச் சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். தனது ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு மாநில உரிமையாக விட்டுக் கொடுத்து, பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி அவர்களிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

தமிழ்நாடு அரசு தனக்கு வேண்டப்பட்ட நபரை புதிய டி.ஜி.பியாக அமர்த்த வேண்டும் என்பதல்ல இங்கே உள்ள பிரச்சினை. சட்டம் - ஒழுங்கு தொடர்பாக மாநில அரசின் கருத்துக்களைப் புறக்கணித்து தனக்கு வேண்டப்பட்ட நபர்களைத் தமிழ்நாட்டில் டி.ஜி.பி.ஆக அமர்த்துவதற்கு ஒன்றிய அரசு முயலும் அடாவடிதான் புதிய டிஜிபி நியமனத்தில் தமிழ்நாடு அரசு சந்திக்கும் பிரச்சினை. ஏற்கனவே இது போன்ற பல பிரச்சினைகளில், மாநில அரசின் உரிமைகளை திராவிட மாடல் அரசு நிலைநாட்டியதைப் போன்று டிஜிபி நியமனத்திலும் மாநில உரிமைகளை நிலைநாட்ட முழுமுயற்சிகளையும் முதலமைச்சர் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்கட்சித் தலைவர் ஏதேதோ சொல்லிப் புலம்புகிறார்.

தற்போது புதிய டி.ஜி.பி. நியமனத்தைக் குறை கூறும் பழனிசாமி, தாம் வணங்குவதாகக் கூறும் அம்மையார் ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக் காலத்தில் எந்த சட்டப் பிரச்சினையும் இல்லாத போதே, எத்தனை மாதங்கள், எத்தனை ஆண்டுகள் டி.ஜி.பி. இல்லாமல் அரசை நடத்தினார் என்பதை விரல் விட்டு எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர மாநில உரிமைகளுக்காகப் போராடும் திராவிட மாடல் நாயகர் - முதலமைச்சர் அவர்களைக் குறை கூறுவதா?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சாதி ஆணவப் படுகொலை தடுப்பு சிறப்புச் சட்டம்!

முதல்வர் அறிவித்த ஆணையத்தை ஆதித் தமிழர் பேரவை வரவேற்கிறது!

நிறுவனர் – தலைவர் அதியமான் அறிக்கை!

சென்னை, அக்.23-

சாதி ஆணவப் படுகொலைக்கு எதிராக தனிச் சட்டம் இயற்றுவதற்கு பரிந்துரை வழங்குவதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் கே.என்.பாஷா தலைமையிலான ஆணையத்தை அமைத்திட தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளதை ஆதித்தமிழர் பேரவை வாழ்த்தி வரவேற்கிறது என அதன் நிறுவனர் - தலைவர் அதியமான் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சாதி மத மறுப்பு திருமணத் தம்பதிகள் தொடர்ச்சியாக சாதி ஆணவக் கொலைகளுக்கு ஆளாவதும்.

சாதி வெறி தாக்குதலுக்கு ஆளாவதும் தொடர்ந்து வருகிறது.

சமூகத்தில் ஒருவருக்கொருவர் கலந்துவிடக் கூடாது என்று அவர் சாதிக்குள் அவரவர் உட்பிரிவுக்குள்தான் இரத்தக் கலப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் இல்லையென்றால் சாதிப்புனிதம் கெட்டுவிடும் என்ற அளவுகோல் திணித்து வைக்கப்பட்டிருக்கிறது.

அறிவியலுக்கு ஒவ்வாத பிற்போக்கு தனங்களால் இந்தியச் சமூகத்தில் அகமணமுறை விளங்குவதால் சாதி மறுப்புத் திருமணங்கள் கொடூரமான வன்முறைகளுக்கு இரையாகி வருகின்றது. குறிப்பாக சாதி கௌரவத்தால் பெற்ற பிள்ளைகளையே படுகொலை செய்யும் அளவிற்கு சாதிய பெருமிதம் அதிகரித்திருக்கிறது.

மேலும் தீண்டாமை வன்கொடுமைகளால் பாதிக்கப்படும் சமூகங்களாக பட்டியல் சமூகம் இருந்தாலும் கூட ரத்தக்கலப்பை ஏற்காமல் இவர்களுக்குள்ளேயே கொலை செய்யும் அளவிற்கு வன்மமும் தாக்குதலும் பெருகியிருக்கிறது. உதாரணத்திற்கு கண்ணகி முருகேசன் தொடங்கி அழகேந்திரன் வரை பட்டியல் சாதி ஆணவக் கொலையால் பலியாகியிருக்கிறார் என்பதை அறியமுடிகிறது. அதேபோல பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்குள்ளேயும் சாதி பொருளாதாரம் வேலைவாய்ப்பு பாலின வேறுபாடு போன்றவற்றையும் சுட்டிக்காட்டி ஆவணப் படுகொலைகளும் நடந்து கொண்டிருப்பது வேதனையளிக்கிறது.

சாதி ஆணவக் கொலைகள் தனி நபர்களால் அல்லது ஒரு குடும்பத்தினரால் மட்டும் நடத்தப்படுவதில்லை. கூடுதலாக சமூக நிர்பந்தம், சாதி ஆதிக்க சக்திகளின் அச்சுறுத்தால், கட்டப்பஞ்சாயத்து - சாதித் தூய்மை போன்ற கருத்தாக்கம் ஆகியனவும் இவற்றின் பின்புலமாக இருக்கின்றன.

ஆகவே ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டங்கள் மட்டும் போதாது தனிச் சட்டம் வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் போராடி இருக்கின்றன.

ஆகவே நமது அரசியலமைப்பு சட்டம் திரு மணத்திற்க்கான இணையை தெரிவு செய்து கொள்ளும் உரிமையை திருமண வயதை எட்டிய ஒவ்வொருவருக்கும் வழங்கியிருக்கிறது இதற்கு எதிரான படுகொலைகளையும் நிர்பந்தங்களையும் வன்முறைகளையும் மற்றும் தாக்குதலையும் தண்டனைக்கு உள்ளாக்கும் விதமாகவும் சிறப்பு சட்டமாகவும் சாதி ஆணவக் கொலை தடுப்புச் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா.அதியமான் கூறியுள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 38வது வட்டத்தில் உள்ள 1000 பொதுமக்கள் கலைஞர் கருணாநிதி நகர் 1வது தெரு, 2வது தெரு நேதாஜி நகர் மெயின்தெரு படேல் நகர் புதிய வினோபாநகர் நாவலர் குடியிருப்பு பகுதிகளில் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் ஏற்பாட்டில் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதில் 38(அ) வட்ட செயலாளர் எஸ்.எல். சுந்தர், கே.சி.ராஜா, பா.தாமோதரன், எஸ்.கமருதீன், எஸ்.செல்வராஜ், மணிகண்டன், அப்பாஸ், எல். சந்திரசேகர், அருணகிரி, சென்னை மாநகராட்சி பொறியாளர் உலகஅரசன்,சுகாதர பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆசிரியர் வெ.கோவிந்தன்

அக்டோபர் 23 (2021)

ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.